# குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம், கரூர்.

**முன்னிலை:-** திரு.எஸ்.பி. பரத்குமார் எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

தமிழ் விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 09 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள், திங்கள்கிழமை,

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 145/2023**

| | | | |
|---|---|---|---|
| 1) | CNR Number | | **TNKR**02-002333-2022 |
| 2) | குற்றமுறையிடுபவர் மற்றும் எதிரிகள் பெயர், விலாசம் | | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>பசுபதிபாளையம் காவல் நிலையம்,<br>கா.நி. குற்ற எண்.569/2020.<br><br>எதிரிகளின் மீது இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் கீழ்.<br><br>// எதிரிகள் //<br>A1- ஷர்மிளா(39/2020),<br>க/பெ.குப்புசாமி,<br>தில்லை நகர்,<br>S. வெள்ளாளப்பட்டி,<br>கரூர் மாவட்டம்.<br><br>A2- தீட்சிகா(22/2020),<br>த/பெ.குப்புசாமி,<br>தில்லை நகர்,<br>S. வெள்ளாளப்பட்டி,<br>கரூர் மாவட்டம். |
| 3) | குற்றம் நடந்த நாள் | | 27.08.2020 |
| 4) | முறையிட்ட நாள் | | 28.08.2020 |
| 5) | முதல் தகவல் அறிக்கை பெறப்பட்ட நாள் | | 07.09.2020 |
| 6) | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | | A1&A2- Absconding |
| 7) | எதிரிகள் முதன் முதலாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட நாள் | | 08.06.2023 |
| 8) | எதிரிகள் பிணையில் விடப்பட்ட நாள் | | இல்லை |

<table>
<tr><td>9)</td><td>எதிரிகள் காவலில் இருந்த நாட்கள்</td><td></td><td>இல்லை</td></tr>
<tr><td>10)</td><td>குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்</td><td></td><td>14.03.2023</td></tr>
<tr><td>11)</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2,கரூர் அவர்களின் பெயர்</td><td></td><td>திரு. தண்டபாணி,</td></tr>
<tr><td>12)</td><td>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பெயர்</td><td></td><td>திரு. ராஜசேகரன்,</td></tr>
<tr><td>13)</td><td>எதிரிகளிடம் கு.வி.முச. 240-பிரிவின்படி கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td></td><td>14.06.2023</td></tr>
<tr><td>14)</td><td>நீதிமன்றத்தால் எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td></td><td>எதிரிகளின் மீது இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் கீழ்.</td></tr>
<tr><td>15)</td><td>எதிரிகளின் பதில்</td><td></td><td>எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள்.</td></tr>
<tr><td>16)</td><td>சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td></td><td>
<table>
<tr><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1.</td><td>24.04.2024</td><td>03.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>24.04.2024</td><td>03.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>21.04.2025</td><td>21.04.2025</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>08.07.2025</td><td>08.07.2025</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>24.09.2025</td><td>24.09.2025</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>14.10.2025</td><td>14.10.2025</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>19.11.2025</td><td>19.11.2025</td></tr>
</table>
</td></tr>
<tr><td>17)</td><td>அனைத்து பலதரப்பட்ட மனுக்களும் கோப்பிற்கு எடுக்கப் பட்ட நாள் -அவற்றிற்கான முடிவு, (மேல் நீதிமன்றங்களில் சேலஞ்ச் மனுக்கள் உட்பட) (routine மனுக்கள் கு.வி.மு ச. 317 போன்றவற்றை தவிர்த்து)</td><td></td><td>இல்லை</td></tr>
<tr><td>18)</td><td>எதிரிகளை கு.வி.மு.ச. 313(1) (ஆ) பிரிவின்படி வினவப் பட்ட நாள்</td><td></td><td>26.11.2025</td></tr>
<tr><td>19)</td><td>தலை மறைவு எதிரிகள் யாராவது இருப்பின் அவர் ஆஜரான நாள், ஆஜர் படுத்தப்பட்ட நாள் போன்ற</td><td></td><td>A1&A2- 08.06.2023</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | விவரங்கள் | | |
| 20) | உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள stay மனு மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட முடிவு | | ஏதுமில்லை. |
| 21) | வழக்கில் விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நாள் | | 17.04.2023 |
| 22) | விசாரணை முடிவுற்ற நாள் | | 09.03.2026 |
| 23) | நடுவரின் தீர்மானம் | | எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை. |
| 24) | முடிவு | | எதிரிகள் குற்றம் சாட்டப்பட்டபடி குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்யப்பட்டது. |
| 25) | எதிரிகளுக்கு, இத்தீர்ப்பாணையின் இலவச நகல் வழங்கப்பட்ட நாள் | | அவ்வாறான சந்தர்ப்பம் எழவில்லை. |
| 26) | தீர்ப்பு நாள் | | 23.03.2026 |

**தீர்ப்புரை**

1) இவ்வழக்கின் வாதியான சாட்சி 1 ஆனவருக்கும், இவ்வழக்கின் எதிரிகளான A1 சர்மிளா, A2 தீட்சிகா ஆகியோர்களுக்கும் இடையே நிலம் சம்பந்தமான பிரச்சினை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் கடந்த 27.08.2020ம் தேதி மாலை 3.00 மணிக்கு சாட்சி 1 ஆனவர் அவரது வீட்டின் அருகே உள்ள தென்னந்தோப்பில் உட்கார்ந்திருந்தபோது இவ்வழக்கின் எதிரி A1 சர்மிளாவும், A2 தீட்சிகாவும் வந்து சாட்சி 1 ஆனவர் வைத்திருந்த அறிவிப்பு பேனரை கிழித்தும், தென்னைமட்டைகளை தீ வைத்து எரித்தபோது சாட்சி 1 ஆனவர் அவர்களிடம் நீங்க யாரும்மா தென்னந்தோப்பில் வந்து பேனரையும், மட்டையையும் சீமெண்ணெய் ஊற்றி எரிக்கிறீங்க என கேட்டதற்கு எதிரி A1 சர்மிளா, A2 தீட்சிகா இருவரும் சாட்சி 1 ஆனவரைப் பார்த்து ஏண்டா கௌட்டு புண்டா மவனே இது எங்களுக்கு சொந்தமான சொத்து நீ வேணும்னா போலீஸ்கிட்ட போய் புகார் கொடு பார்த்துகலாம் என்று திட்டியபோது சாட்சி 1 ஆனவர் காவல்நிலைய செல்ல முற்பட்டபோது எதிரி A1 சர்மிளா என்பவர் சாட்சி 1 ஆனவரை எங்கடா போற என்று சொல்லி இடது கன்னத்தில் அறைந்ததில் கீழே விழுந்துவிட கீழே கிடந்த ரீப்பர் கட்டையை எடுத்து இரண்டு பேரும் மாறி மாறி அடித்து சாட்சி 1 ஆனவருக்கு தோள்பட்டை, இடதுபக்க இடுப்பு

ஆகிய இடங்களில் சொற்ப காயத்தை ஏற்படுத்திவிட்டு எதிரி A1 கையில் வைத்திருந்த ரீப்பர் கட்டையை காண்பித்து சாட்சி 1 ஆனவரைப் பார்த்து என்னைக்கா இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் செய்து பயத்தை ஏற்படுத்திய குற்றத்தை செய்துள்ளார்கள். எனவே எதிரி A1 சர்மிளா என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 323, 324 மற்றும் 506(ii) இ.த.ச பிரிவுகளின் படியும் மற்றும் A2 தீட்சிகா என்பவரின் செய்கையானது 294(b) இதசவின் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக பசுபதிபாளையம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 569/2020 ல் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் இவ்வழக்காக சி.சி.எண். 145/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) மேற்படி எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், கு.வி.மு.ச. 207-ஆவது பிரிவுபடி எதிரிகளுக்கு வழங்கப்படவேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) எதிரிகள் மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறினார்கள். இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரிகளின் மீது இ.த.ச.294(b), 323, 324 மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் படி குற்றச்சாட்டு வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரிகள் அக்குற்றச்சாட்டையும் மறுத்துள்ளார்கள். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.7 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் அ.சா.பொ.1 ஆக சான்று பொருள் ஒன்றும் குறியீடு செய்யப்படுகின்றன.

<u>5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-</u>

i) இவ்வழக்கில் **அ.சா.1**, தனது சாட்சியத்தில், “நான் செட்டிபாளையத்தில் குடியிருந்து சம்பவ சமயத்தில் வீட்டில் இருந்து வந்தேன். புகார்தாரர் நாராயணன் எனது தாத்தா அவர் தற்போது இறந்துவிட்டார். கடந்த 27.08.2020 ம் தேதி மதியம் சுமார் 03.10 மணியளவில் எனது தாத்தா நாராயணன் எனக்கு போன் மூலம் ஆஜர் எதிரி சர்மிளா எனது தாத்தாவின் போக்கிய தோப்பில் மட்டைகளை எரிப்பதாகவும் அதை எனது தாத்தா

கேட்டதற்கு அவரை அசிங்கமாக திட்டி கையால் இடது கன்னத்தில் அடித்ததாகவும், தான் கீழே விழுந்துவிட்டதாகவும், சர்மிளா அவரது மகள் தீட்சிகாவும் ரீப்பர் கட்டையால் தொடை முதுகில் அடித்ததாகவும், கொலைமிரட்டல் விடுத்ததாகவும் ரீப்பர் கட்டையை போட்டுவிட்டு சென்றதாகவும் சொன்ன தகவலைக் கேள்விப்பட்டு அடிபட்ட எனது தாத்தாவை கரூர் அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தனர் " என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2**, தனது சாட்சியத்தில், "நான் மேலப்பாளையத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. என்னுடன் பாண்டியன் என்பவர் கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. அதிலும் என்னுடன் பாண்டியன் என்பவர் கையெழுத்து செய்தார். கடந்த 28.08.2020 மதியம் 03.00 மணியளவில் பசுபதிபாளையம் போலிசார் தகராறு நடந்த இடத்தைப் பார்வையிட்டு படம் வரைந்தனர். அங்கு கிடந்த ரீப்பன் கட்டை ஒன்றை எடுத்தனர். அதை போலிசார் கைப்பற்றுதல்மகசர் மூலம் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் ரீப்பர்கட்டை தான் போலிசார் கைப்பற்றியது. **அந்த பார்வைமகசர் மற்றும் கைப்பற்றுதல்மகசர் முறையே அ.சா.ஆ.1 மற்றும் 2.** போலிசார் என்னை விசாரித்தனர்" என சாட்சியமளித்துள்ளார்.

iii) இவ்வழக்கில் **அ.சா.3**, தனது சாட்சியத்தில், "நான் புலியூர் குருவிபாளயைத்தில் குடியிருந்து EEE முடித்துவிட்டு தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். நாராயணன் என் தாத்தா ஆவார். ஆஜர் எதிரி மற்றும் ஆஜரில்லாத எதிரியை எனக்கு தெரியும். கடந்த 27.08.2020ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் ஆஜர் எதிரி மற்றும் ஆஜரில்லாத எதிரி தன் தாத்தாவுக்கு சொந்தமான தென்னந்தோப்பில் தீ வைத்தது தெரிந்து என் தாத்தா நாராயணன் தென்னந்தோப்பு சென்று ஆஜர் எதிரியிடம் எதற்கு தீ வைக்கிறாய் என்று கேட்டார். ஆஜர் எதிரி நிலம் தன்னுடையது. அதற்கு என் தாத்தா அது தன்னுடைய இடம் என்று கூறினார். ஆஜர் எதிரி சர்மிளா என் தாத்தாவை இடது கன்னத்தில் கையால் அடித்தார். மேலும், கெட்ட வார்த்தையால் திட்டினார். நான் வெளியே வந்து பார்த்தேன். சர்மிளா என் தாத்தாவை கீழே தள்ளிவிட்டார். அவர் மகள் 2ம் எதிரி என் தாத்தாவைப் பிடித்துக்கொள்ள ஆஜர் எதிரி அருகிலிருந்த ரீப்பர் கட்டையால் என் தாத்தாவை தொடை மற்றும் முதுகில் அடித்தார். ஆஜர் எதிரி ரீப்பர்கட்டையை கையில் வைத்துக்கொண்டு என்னைக்கிருந்தாலும் உன் சாவு என் கையில் என சொல்லி மிரட்டினார். நான் என் தாத்தாவை துாக்கினேன். பின்னர் வீட்டிற்கு சென்று போன் மூலம் சம்பவம் குறித்து என் அண்ணன் வினோத்திற்கு தகவல்

சொன்னேன். ஆஜர் எதிரி மற்றும் ஆஜர் இல்லாத எதிரி இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டனர். பின் என் அண்ணன் உதவியுடன் என் தாத்தாவை அரசு மருத்துவமனைக்கு என் அண்ணன் அழைத்து சென்றனர். சம்பவம் பற்றி போலிசார் என்னை 28.08.2020 ம் தேதி என்னை விசாரித்தர்கள்" என சாட்சியமளித்துள்ளார்.

iv) இவ்வழக்கில் **அ.சா.4**, தனது சாட்சியத்தில், "நான் தற்போது அரசு மருத்துவர் பணியிலிருந்து விடுவித்துக்கொண்டு கனிஷ்கா குழந்தைகள் மருத்துவமனை என்ற பெயரில் தனியாக மருத்துவமனை வைத்துள்ளேன். கடந்த 27.08.2020 ம் வருடம் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மாலை சுமார் 05.05 மணிக்கு பணியிலிருந்தபோது தற்போது நாராயணன் என்பவரை வினோத் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது அன்றையதினமே சுமார் மதியம் 03.00 மணியளவில் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் தன்னை ரீப்பர் கட்டையாலும், கையாலும், காலாலும் அடித்ததாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபாது இரண்டு தோள்பட்டையிலும், இடுப்பு இடதுபுற மார்பு பகுதியில் வலி இருப்பதாக கூறினார். அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்தேன். அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின்படி நுண்கதிர் படம் மார்பு மற்றும் இடுப்பு பகுதிக்கு எடுக்கப்பட்டது. அதில் எலும்புமுறிவு எதுவும் காணப்படவில்லை. ஆகையால் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்றளித்தேன். **அந்த விபத்துபதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.3 மற்றும் 4.** ரீப்பர் கட்டை கையாலும், கட்டையாலும், கையாலும், காலாலும் அடித்ததாலும் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. போலிசார் என்னை விசாரித்தனர்" என சாட்சியமளித்துள்ளார்.

v) இவ்வழக்கில் **அ.சா.5**, தனது சாட்சியத்தில், "நான் தற்போது வெள்ளியணை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.08.2020 ம் தேதி பசுபதிபாளையம் காவல்நியைத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்த போது கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி அங்குசென்று உள்நோயாளியாக இருந்த நாராயணன் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து பசுபதிபாளையம் காவல்நிலையக் குற்ற எண்.569/2020, ச.பி 294(b), 323, 324, 506(2) இதசவின் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **அந்த முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.5.** முதல் தகவல் அறிக்கையை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் நாகராஜன் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்" என சாட்சியமளித்துள்ளார்.

vi) இவ்வழக்கில் **அ.சா.6**, தனது சாட்சியத்தில், "நான் தற்போது கரூர்நகர காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது

காவல்நிலையத்தில் பணிபுரிந்த தலைமைக்காவலர் முருகேசன் அவர்களுடன் பணிபுரிந்த வகையில் அவருடைய கையெழுத்து எழுத்துநடை நன்கு பரிட்சயம் என்பதால் வழக்கு கோப்பினைப் பார்வையிட்டு அவருக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.08.2020 ம் தேதி 14.00 மணிக்கு தலைமைக்காவலர் முருகேசன் நிலையப் பொறுப்பில் இருந்தபோது அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த நாராயணன் கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று நிலையக் குற்ற எண்.569/2020, ச.பி 294(**b**), 323, 324, 506(2) இதசவின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார். வழக்கினை மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் என் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே 15.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பாண்டியன், விக்னேஷ் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரிவரைபடம் மற்றும் கைப்பற்றுதல்மகசர் 15.30 மணிக்கு தயார் செய்தேன். **அந்த மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6.** பின்னர் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மையென தெரிய வந்ததன்பேரில் எதிரியை தேடி வந்தபோது, நான் 26.11.2020 ம் தேதி பணி மாறுதலாக வாங்கல் காவல்நிலையம் சென்றுவிட்டதால் மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் கண்ணதாசனிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன் " என சாட்சியமளித்துள்ளார்.

vii) இவ்வழக்கில் **அ.சா.7**, தனது சாட்சியத்தில், " நான் தற்போது க.பரமத்தி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.03.2021 ம் தேதி பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொறுப்பேற்ற பின்பு குற்ற எண்.569/2020 வழக்கின் மேல்விசாரணைக்கு என் பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.7. அந்த ரீப்பர் கட்டை ஒன்று அ.சா.பொ.1.** இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்" என சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சி விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

6) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(ஆ)-ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார்கள். எதிரிகள் தன்னுடைய தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்றார்கள். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகளின் மீது இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

9) அரசு தரப்பில், இவ்வழக்கின் வாதியான சாட்சி 1 ஆனவருக்கும், இவ்வழக்கின் எதிரிகளான A1 சர்மிளா, A2 தீட்சிகா ஆகியோர்களுக்கும் இடையே நிலம் சம்பந்தமான பிரச்சினை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் கடந்த 27.08.2020 ம் தேதி மாலை 3.00 மணிக்கு சாட்சி 1 ஆனவர் அவரது வீட்டின் அருகே உள்ள தென்னந்தோப்பில் உட்கார்ந்திருந்தபோது இவ்வழக்கின் எதிரி A1 சர்மிளாவும், A2 தீட்சிகாவும் வந்து சாட்சி 1 ஆனவர் வைத்திருந்த அறிவிப்பு பேனரை கிழித்தும், தென்னைமட்டைகளை தீ வைத்து எரித்தபோது சாட்சி 1 ஆனவர் அவர்களிடம் நீங்க யாரும்மா தென்னந்தோப்பில் வந்து பேனரையும், மட்டையையும் சீமெண்ணெய் ஊற்றி எரிக்கிறீங்க என கேட்டதற்கு எதிரி A1 சர்மிளா, A2 தீட்சிகா இருவரும் சாட்சி 1 ஆனவரைப் பார்த்து ஏண்டா கௌட்டு புண்டா மவனே இது எங்களுக்கு சொந்தமான சொத்து நீ வேணும்னா போலீஸ்கிட்ட போய் புகார் கொடு பார்த்துகலாம் என்று திட்டியபோது சாட்சி 1 ஆனவர் காவல்நிலைய செல்ல முற்பட்டபோது எதிரி A1 சர்மிளா என்பவர் சாட்சி 1 ஆனவரை எங்கடா போற என்று சொல்லி இடது கன்னத்தில் அறைந்ததில் கீழே விழுந்துவிட கீழே கிடந்த ரீப்பர் கட்டையை எடுத்து இரண்டு பேரும் மாறி மாறி அடித்து சாட்சி 1 ஆனவருக்கு தோள்பட்டை, இடதுபக்க இடுப்பு ஆகிய இடங்களில் சொற்ப காயத்தை ஏற்படுத்திவிட்டு எதிரி A1 கையில் வைத்திருந்த ரீப்பர் கட்டையை காண்பித்து சாட்சி 1 ஆனவரைப் பார்த்து என்னைக்கா இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் செய்து பயத்தை ஏற்படுத்திய குற்றத்தை செய்துள்ளார்கள். எனவே எதிரி A1 சர்மிளா என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 மற்றும் 506(ii) இ.த.ச பிரிவுகளின் படியும் மற்றும் A2 தீட்சிகா என்பவரின் செய்கையானது 294(b) இதசவின் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக பசுபதிபாளையம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண்.569/2020 ல் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை

நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) இவ்வழக்கின் நிகழ்வுநிலை புகார்தாரரான நாராயணன் என்பவர் வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்டார். எனவே பட்டியல் சாட்சி 3 ஆன வினோத் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 வினோத் பாதிக்கப்பட்ட நபரின் பேரன் ஆவார். அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “நான் செட்டிபாளையத்தில் குடியிருந்து சம்பவ சமயத்தில் வீட்டில் இருந்து வந்தேன். புகார்தாரர் நாராயணன் எனது தாத்தா அவர் தற்போது இறந்துவிட்டார். கடந்த 27.08.2020 ம் தேதி மதியம் சுமார் 03.10 மணியளவில் எனது தாத்தா நாராயணன் எனக்கு போன் மூலம் ஆஜர் எதிரி சர்மிளா எனது தாத்தாவின் போக்கிய தோப்பில் மட்டைகளை எரிப்பதாகவும் அதை எனது தாத்தா கேட்டதற்கு அவரை அசிங்கமாக திட்டி கையால் இடது கன்னத்தில் அடித்ததாகவும், தான் கீழே விழுந்துவிட்டதாகவும், சர்மிளா அவரது மகள் தீட்சிகாவும் ரீப்பர் கட்டையால் தொடை முதுகில் அடித்ததாகவும், கொலைமிரட்டல் விடுத்ததாகவும் ரீப்பர் கட்டையை போட்டுவிட்டு சென்றதாகவும் சொன்ன தகவலைக் கேள்விப்பட்டு அடிபட்ட எனது தாத்தாவை கரூர் அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தனர்" என்று கூறியுள்ளார்.

11) அ.சா.1 ன் சாட்சியத்தை ஆராய்கையில், சம்பவ தினத்தன்று சம்பவயிடத்தில் அவர் இல்லை என்பதும் நிகழ்வுநிலை புகார்தாரரான இறந்துபோன நாராயணன் என்பவர் போன் செய்து அழைத்ததற்கு பின்னர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சம்பவயிடத்திற்கு வந்து பாதிக்கப்பட்ட நாராயணன் என்பவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றது தெரியவருகிறது. எனவே அ.சா.1 ன் சாட்சியம் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டினை தீர்மானிப்பதற்கு போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

12) இவ்வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக இறந்துபோன நிகழ்வுநிலை புகார்தாரரின் பேத்தியான கமலீஸ்வரி என்பவர் அ.சா.3 ஆக அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார். எனவே இவ்வழக்கினை தீர்மானிப்பதற்கு அ.சா.3 ன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அ.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "நாராயணன் என் தாத்தா ஆவார். ஆஜர் எதிரி மற்றும் ஆஜரில்லாத எதிரியை எனக்கு தெரியும். கடந்த 27.08.2020 ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் ஆஜர் எதிரி மற்றும் ஆஜரில்லாத எதிரி தன் தாத்தாவுக்கு சொந்தமான தென்னந்தோப்பில் தீ வைத்தது தெரிந்து என் தாத்தா நாராயணன் தென்னந்தோப்பு சென்று ஆஜர் எதிரியிடம் எதற்கு தீ வைக்கிறாய் என்று

கேட்டார். ஆஜர் எதிரி நிலம் தன்னுடையது. அதற்கு என் தாத்தா அது தன்னுடைய இடம் என்று கூறினார். ஆஜர் எதிரி சர்மிளா என் தாத்தாவை இடது கன்னத்தில் கையால் அடித்தார். மேலும், கெட்ட வார்த்தையால் திட்டினார். நான் வெளியே வந்து பார்த்தேன். சர்மிளா என் தாத்தாவை கீழே தள்ளிவிட்டார். அவர் மகள் 2 ம் எதிரி என் தாத்தாவைப் பிடித்துக்கொள்ள ஆஜர் எதிரி அருகிலிருந்த ரீப்பர் கட்டையால் என் தாத்தாவை தொடை மற்றும் முதுகில் அடித்தார். ஆஜர் எதிரி ரீப்பர்கட்டையை கையில் வைத்துக்கொண்டு என்னைக்கிருந்தாலும் உன் சாவு என் கையில் என சொல்லி மிரட்டினார். நான் என் தாத்தாவை தூக்கினேன். பின்னர் வீட்டிற்கு சென்று போன் மூலம் சம்பவம் குறித்து என் அண்ணன் வினோத்திற்கு தகவல் சொன்னேன். ஆஜர் எதிரி மற்றும் ஆஜர் இல்லாத எதிரி இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டனர். பின் என் அண்ணன் உதவியுடன் என் தாத்தாவை அரசு மருத்துவமனைக்கு என் அண்ணன் அழைத்து சென்றார்" என்று கூறியுள்ளார்.

13) மேற்படி அ.சா.3 ன் முதல்விசாரணை சாட்சியத்தினை ஆராய்கையில், சம்பவம் நடந்தபோது அவர் சம்பவயிடத்தில் இருந்ததும் எதிரிகள் இருவரும் இறந்துபோன நிகழ்வுநிலை புகார்தாரரை தகாத வார்த்தைகளால் திட்டி ரீப்பர் கட்டையில் தொடை மற்றும் முதுகில் அடித்து கொலைமிரட்டல் விடுத்ததும் அது பற்றி வீட்டுக்கு சென்று போன் மூலம் சம்பவம் குறித்து தன் அண்ணனான அ.சா.1 வினோத்திற்கு தகவல் சொன்னதும் தெரியவருகிறது. மேற்படி கூற்றின் உண்மைத்தன்மையை ஆராய்கையில், இறந்துபோன நிகழ்வுநிலை புகார்தாரர் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் சம்பவம் நடந்ததற்கு பின்னிட்டு அங்கு வந்த தனது பேரன் வினோத் தன்னை அவருடைய இருசக்கர வாகனத்தில் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்ததாக கூறியுள்ளார். மேற்படி புகார் வாக்குமூலத்தில் எங்குமே சம்பவத்தின் போது அ.சா.3 கமலீஸ்வரி இருந்ததாக அவர் குறிப்பிட்டு கூறவில்லை.

14) மேலும் அ.சா.1 தனது முதல்விசாரணை சாட்சியத்தில் சம்பவம் குறித்து தனது தாத்தா நாராயணன் தனக்கு போன் செய்து தகவல் சொன்னதன் அடிப்படையில் சம்பவயிடத்திற்கு சென்று மேற்படி நாராயணனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறியுள்ளார். தனக்கு குறுக்கு விசாரணையிலும் எதிரிகள் தாக்கிவிட்டார்கள் என்கிற விவரத்தை தனக்கு யார் சொன்னார்கள் என்றால் தன் தாத்தா நாராயணன்தான் சொன்னார் என்று கூறியுள்ளார். மாறாக அ.சா.3 கமலீஸ்வரி தனக்கு போன் செய்து சொன்னதாக எங்கும் கூறவில்லை. மேலும் அ.சா.3 கமலீஸ்வரி சம்பவத்தினை நேரில் பார்த்ததாக கூறியுள்ளநிலையில் தன் கண் முன்னால் தனது தாத்தா இரண்டு பெண்களால் தாக்கப்பட்டு கொண்டிருக்கும் போது அவர்களை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும்

சந்தேகத்திற்கிடமாக உள்ளது. மேலும் தன்னை எதிரிகள் தாக்கியபோது அருகில் இருந்த தனது பேத்தி கமலீஸ்வரி வந்ததாகவோ தடுக்க முயற்சி செய்தததாகவோ இறந்துபோன நிகழ்வுநிலை புகார்தாரரான நாராயணன் குறிப்பிட்டு தனது புகார் மனுவில் கூறாததும் அ.சா.3 உண்மையிலேயே சம்பவத்தினை நேரில் பார்த்திருப்பாரா என்பதில் சந்தேகம் ஏற்படுகிறது.

15) அ.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், சம்பவம் நடந்த இடமானது என் தாத்தா நாராயணன் என்பவர் குத்தகைக்கு எடுத்து அனுபவித்துவரும் இடமென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவயிடத்தினை 1 ம் எதிரி விலைக்கு வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் தொடர்பாக எப்போது காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றேன் என்றால் போலிசார் என்னிடம் போனில் தான் விசாரித்தார்கள். நேரில் செல்லவில்லை. நான் வெளிநாட்டில் இருந்தேன் என்று கூறியுள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில், போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தினை நான் நேரில்தான் வழங்கினேன். போலிசார் என்னை விசாரித்த நாளில் மதியம் 03.00 மணியளவில் என் தாத்தா வீட்டில் வைத்து விசாரித்தார்கள் என்று தனது முந்தைய கூற்றுக்கு முரண்பட்டு கூறியுள்ளார். போலிசார் தன்னை போனில் தான் விசாரித்தார்கள் என்று கூறியுள்ளநிலையில் அதற்கு முரண்பட்டு தனது தாத்தா வீட்டில் நேரில் விசாரித்ததாக ஒன்றுக்கொன்று முரண்படும் விதமாக அ.சா.3 சாட்சியம் அளித்துள்ளார்.

16) மேலும் அ.சா.1 வினோத் தனது குறுக்கு விசாரணையில், எதிரிகள் சம்பவயிடம் சென்று தீ வைத்ததும் சண்டை செய்தததும் குறித்து கமலியின் செல்போனில் கமலி பதிவு செய்து தனக்கு அனுப்பியதாக கூறியுள்ளார். அதனை போலிசாரிடம் ஒப்படைக்கவில்லையா என்ற நீதிமன்ற கேள்விக்கு இல்லை என பதிலளித்துள்ளார். சம்பவம் பற்றி செல்போனில் பதிவு செய்த வீடியோ பதிவானது மிக முக்கிய ஆவணம் ஆகும். ஆனால் அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வீடியோ ஆதாரத்தை போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை என்பது கேள்விக்குறியதாகவும் சந்தேகத்திற்கிடமாகவும் உள்ளது. மேலும் அவ்வாறு தான் வீடியோ எடுத்ததாக அ.சா.3 கமலீஸ்வரி தனது முதல்விசாரணை சாட்சியத்தில் குறிப்பாக எங்கும் கூறவில்லை. எனவே மேற்படி கூற்றுகள் வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறியுள்ளது தெரியவருகிறது. மேற்படி முன்னுக்குப்பின்னான உரைகளால் உண்மையிலேயே அ.சா.3 சம்பவத்தை நேரில் பார்த்தாரா என்பதில் சந்தேகம் ஏற்படுகிறது.

17) அடுத்ததாக சம்பவத்தில் தாக்குதலுக்கு உண்டான இறந்துபோன நாராயணன் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவரான அ.சா.4 டாக்டர் பிரபாகரன் என்பவரது சாட்சியம் கவனிக்கதக்க ஒன்றாகும். அவர் முதல் விசாரணை சாட்சியத்தில், "கடந்த 27.08.2020 ம்

வருடம் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மாலை சுமார் 05.05 மணிக்கு பணியிலிருந்தபோது தற்போது நாராயணன் என்பவரை வினோத் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது அன்றையதினமே சுமார் மதியம் 03.00 மணியளவில் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் தன்னை ரீப்பர் கட்டையாலும், கையாலும், காலாலும் அடித்ததாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபாது இரண்டு தோள்பட்டையிலும், இடுப்பு இடதுபுற மார்பு பகுதியில் வலி இருப்பதாக கூறினார். அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்தேன். அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின்படி நுண்கதிர் படம் மார்பு மற்றும் இடுப்பு பகுதிக்கு எடுக்கப்பட்டது. அதில் எலும்புமுறிவு எதுவும் காணப்படவில்லை. ஆகையால் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்றளித்தேன்" என்று கூறியுள்ளார்.

18) மேற்படி அ.சா.4ன் சாட்சியத்தை ஆராய்கையில், சிகிச்சைக்கு வந்த நாராயணன் என்பவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு இரண்டு தோள்பட்டையிலும் இடுப்பு மற்றும் இடதுபுற மார்பு பகுதியில் வலி இருப்பதாக தெரிவித்ததாக கூறியுள்ளார். அ.சா.4 வழங்கிய அ.சா.ஆ.4 காயச்சான்றிதழை ஆராய்கையில், சம்பவ தினத்தன்று மாலை 05.05 மணியளவில் மேற்படி நாராயணன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதும் நுண்கதிர்படம் எடுத்து பார்த்ததில் அவருக்கு எலும்புமுறிவு எதுவும் ஏற்படவில்லை எனவும் புதிய சிராய்ப்பு காயம் எதுவும் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சான்றிதழிலிருந்து நிகழ்வுநிலைபுகார்தாரரான நாராயணன் என்பவருக்கு வெளிப்புற காயம் எதுவும் இல்லை என்பது தெரியவருகிறது.

19) அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் 1ம் எதிரி சர்மிளா தன்னை இடது கன்னத்தில் ஓங்கி அறைந்தார் எனவும் தான் உடனே கீழே விழுந்துவிட்டதாகவும் உடனே அவரது மகள் தனது நெஞ்சில் எட்டி எட்டி உதைத்தார் எனவும் அப்போது சர்மிளா அருகில் இருந்த ரீப்பர் கட்டையை எடுத்து இரண்டு தொடைகளிலும், முதுகிலும் மாறி மாறி அடித்ததாக கூறியுள்ளார். அவ்வாறு ரீப்பர் கட்டையால் மாறி மாறி தாக்கியதாக கூறியுள்ளநிலையில் உடம்பில் அவ்வாறு தாக்கப்பட்டதற்கான அடையாளக்குறி காணப்படும். சம்பவம் நடந்த அன்றே உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி நாராயணன் என்பவரது தொடை மற்றும் முதுகில் ரீப்பர் கட்டையால் தாக்கியதற்குண்டான அடையாளக்குறிகள் இருந்ததாக மருத்துவர் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழிலிலும் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. மேலும் வெளிக்காயம் எதுவும் இல்லை எனவும் நுண்கதிர்படம் எடுத்து பார்த்ததில் உள்காயங்களோ, எலும்புமுறிவோ ஏற்படவில்லை என்பதும்

தெரியவருகிறது. எனவே புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ள அளவிற்கு நிகழ்வுநிலை புகார்தாரர் தாக்குதலுக்கு உள்ளாகவில்லை என்பது தெரியவருகிறது.

20) இவ்வழக்கில் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நிகழ்வுநிலை புகார்தாரரான நாராயணன் இறந்துவிட்ட சூழ்நிலையில் அவரது சாட்சியம் பதிவு செய்ய வாய்ப்பில்லாமல் போய்விட்டது. மேற்படி நபருக்குதான் தனக்கு ஏற்பட்ட காயங்கள் என்ன என்பது குறித்தும், யார் என்ன ஆயுதத்தால் தாக்கினார்கள் என்பது குறித்தும் எங்கு தாக்கினார்கள் என்பது குறித்தும் தெளிவாக தெரிந்திருக்கும். அவ்வாறு இறந்துபோன நாராயணன் என்பவரின் வாக்குமூலம் பதிவு செய்ய இயலாத சூழ்நிலையில் நேரடியாக பார்த்த சாட்சியம் மற்றும் மருத்துவரின் சாட்சியம் மட்டுமே வழக்கினை தீர்மானிக்க உதவும். இவ்வழக்கில் அ.சா.3 கமலீஸ்வரி என்பவர் நேரில் பார்த்த சாட்சியாக அரசுதரப்பில் முன்னிருத்தப்பட்ட போதிலும் அவர் சம்பவயிடத்தில் இருந்தததாக நாராயணன் தனது புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் சம்பவம் குறித்து தான்தான் தனது அண்ணனான அ.சா.1 க்கு போன் செய்து சொன்னதாக அ.சா.3 கூறியுள்ளநிலையில் அதற்கு மாறாக தனக்கு தனது தாத்தா நாராயணன்தான் போன் செய்து சொன்னதாக அ.சா.1 முரண்பட்டு கூறியுள்ளார். மேலும் சம்பவத்தினை அ.சா.3 தனது செல்போனில் வீடியோ எடுத்ததாக அ.சா.1 கூறியுள்ள நிலையில் அதுபற்றி அ.சா.3 தனது சாட்சியத்தில் எங்கும் குறிப்பிடவில்லை. மாறாக சம்பவம் நடந்த பின்னர் வீட்டிற்கு சென்று போன் மூலம் சம்பவம் குறித்து தன் அண்ணன் வினோத்திற்கு தகவல் சொன்னதாக அ.சா.3 தனது முதல்விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளார். சம்பவத்தினை தன் கையில் வைத்திருந்த செல்போன் மூலம் அ.சா.3 வீடியோ எடுத்திருந்தால் அங்கிருந்தே தனது அண்ணனான அ.சா.1 க்கு செல்போன் மூலம் தகவல் சொல்லியிருக்க முடியும். ஆனால் அ.சா.3 தனது சாட்சியத்தில் தனது வீட்டிற்கு சென்று போன் மூலம் தனது அண்ணனுக்கு தகவல் சொன்னதாக கூறியதிலிருந்து அ.சா.1 ன் கூற்று பொய்யானது என்பது தெரியவருகிறது. மேலும் தனது தாத்தா தாக்கப்படுவதை நேரில் பார்த்தும் அதனை தடுக்க எவ்வித முயற்சியும் செய்யாததும் அ.சா.3 சம்பவத்தை நேரில் பார்த்திருப்பாரா என்பதை சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

21) இவ்வழக்கில் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் திரு.நாகராஜன், சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் பாண்டியன், விக்னேஷ் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரிவரைபடம் மற்றும் கைப்பற்றுதல்மகசர் தயார் செய்ததாக கூறியுள்ளார். மேலும் மற்றொரு புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7 காவல் உதவி ஆய்வாளர் திரு. சந்திரசேகரன், வழக்குச்சொத்தான ரீப்பர் கட்டையை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக

கூறியுள்ளார். இது சம்பந்தமாக பார்வைமகசர் மற்றும் கைப்பற்றுதல்மகசர் சாட்சியான அ.சா.2 விக்னேஷ் தனது முதல்விசாரணை சாட்சியத்தில், போலிசார் தன் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு படம் வரைந்து அங்கே கிடந்த ரீப்பர் கட்டை ஒன்றை எடுத்ததாகவும் தன்னுடன் பாண்டியன் என்பவரும் கையெழுத்து செய்ததாகவும் கூறியுள்ளார். ஆனால் தனது குறுக்கு விசாரணையில், பார்வைமகசரில் தன்னுடன் கையொப்பம் செய்தவர் பெயர் ஞாபகமில்லை எனவும் இருவரும் ஒரே இடத்தில் கையொப்பம் செய்தோமோ என்றால் நான் தனியாக செய்தேன். அவர் எப்போது கையொப்பம் செய்தார் என்று ஞாபகமில்லை என்று முரண்பட்டு கூறியுள்ளார். எனவே அ.சா.2 முன்னிலையில் ரீப்பர் கட்டை கைப்பற்றப்பட்டதா என்பதும் சந்தேகத்திற்கிடமாக உள்ளது.

22) எதிரிகள் மீது சாட்டப்பட்டுள்ள தகாத வார்த்தைகளால் திட்டுதல் மற்றும் கொலைமிரட்டல் விடுத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளை பரிசீலிக்கையில், சம்பவயிடமானது நிகழ்வுநிலைபுகார்தாரர் நாராயணன் போக்கியத்திற்கு உபயோகித்துவரும் இடம் என்பதும் அதனை 1ம் எதிரி அதன் உரிமையாளமிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதும் அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து தெரியவருகிறது. மேலும் மேற்படி சம்பவயிடமானது பொதுயிடம் அல்ல என்பதும் தனிப்பட்ட நபருக்கு சொந்தமான இடம் என்பதும் தெரியவருகிறது. பாதிக்கப்பட்ட நபரின் சாட்சியம் பதிவு செய்யாத இயலாத சூழ்நிலையில் நேரடி சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3, எதிரிகள் தன் தாத்தாவை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ அதனால் அவருக்கு மற்றவரின் முன்னிலையில் அவமானம் நேர்ந்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அதேபோல எதிரிகள் ரீப்பர் கட்டையால் தாக்கியதால் தனக்கு உடனடியாக சம்பவயிடத்தில் மரணபயம் ஏற்பட்டதாக மேற்படி நாராயணன் தனது புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை. அவரது வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யாத இயலாதநிலையில் அவருக்கு மரணபயம் ஏற்பட்டதாக அ.சா.3 கூற இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே மேற்படி குற்றச்சாட்டுகளை பொறுத்து அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

23) எனவே மேற்கண்டவாறு விவாதங்கள் மற்றும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலித்ததின் அடிப்படையில் எதிரிகளின் மீது சாட்டப்பட்ட இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(ii) பிரிவின் படியான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

24) முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும்

எதிரிகளின் மீது சாட்டப்பட்ட இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

25) இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 137/2022** ல் கண்டுள்ள அ.சா.பொ.1 ஆன சுமார் 3 அடி நீளமுள்ள மர ரீப்பர் கட்டை ஒன்றினை மேல்முறையீட்டுக் காலக்கெடுவிற்குப் பின் உரிய முறையில் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 23.03.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.03.23 19:32:12 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :-</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | வினோத் |
| அ.சா.2 | விக்னேஷ் |
| அ.சா.3 | கமலீஸ்வரி |
| அ.சா.4 | மருத்துவர் திரு. பிரபாகர் |
| அ.சா.5 | திரு. முருகேசன், தலைமைக்காவலர் |
| அ.சா.6 | திரு. நாகராஜன், காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.7 | திரு. சந்திரசேகரன், காவல் உதவி ஆய்வாளர் |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.2 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.3 | விபத்து பதிவேட்டு அறிக்கை |
| அ.சா.ஆ.4 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.5 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | படிவம்-91 |

**<u>அரசுதரப்பு சான்று பொருள் :-</u>**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | சுமார் 3 அடி நீளமுள்ள மர ரீப்பர் கட்டை **(ஆர்.பி.எண். 137/2022)** |

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருள்கள் :-</u>**

**இல்லை**

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.03.23 19:32:23 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

| | | |
|---|---|---|
| 23.03.2026<br><br>**சிசி.எண். 145/2023**<br><br>எதிரிகள் ஆஜர். இவ்வழக்கில் முன் வைக்கப் பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது. தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.<br><br>முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரிகளின் மீது சாட்டப்பட்ட இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 137/2022** ல் கண்டுள்ள அ.சா.பொ.1 ஆன சுமார் 3 அடி நீளமுள்ள மர ரீப்பர் கட்டை ஒன்றினை மேல்முறையீட்டுக் காலக்கெடுவிற்குப் பின் உரிய முறையில் அழிக்க உத்தரவிடப்படுகிறது.<br><br>BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.03.23 19:32:35 +0530<br><br>**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.** | | |